25.11.2024 அ.வ. எண். 301/2018 பி.சா.1 கோபால்

குறுக்கு விசாரணை

என் அப்பா பெயர் சுப்ரமணி. என் அப்பாவிற்கு ருத்திரமூர்த்தி, நான், திருவேங்கடம், உத்திராணி ஆகியோர்கள் மகன்கள், மகள். வாதி என் அண்ணன் ருத்திரமூர்த்தியின் மனைவி. வாதியின் கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று காஞ்சிபுரத்தில் பி.எஸ்.என்.எல்., அலுவலகத்தில் பாதுகாவலராக பணிபுரிந்து வந்தார். தாவா சொத்தை என் அண்ணன் ருத்திரமூர்த்தி 2006 ஆம் ஆண்டு கோவிந்தம்மாள், வனராணி, பாலசுந்தரம், முனியம்மாள் ஆகியோர்களிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். என் அண்ணன் ருத்திரமூர்த்தி 2008 ஆம் ஆண்டு சாலை விபத்தில் இறந்துவிட்டார். ருத்திரமூர்த்தி இறந்தபிறகு சொத்திற்கான பட்டா வாதி பெயரில் மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் கணவர் இறந்தபோது குழந்தைகள் படித்துக்கொண்டு இருந்தார்கள். 2 மகள்கள், ஒரு மகன். குழந்தைகளை படிக்க வைப்பதற்காக வாதி காஞ்சிபுரம் சென்றுவிட்டார். வாதியின் கணவர் இறந்தபிறகு வாதி தான் பயிர் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் 40 வருடங்களாக நான் தான் பயிர் செய்து வருகிறேன். சொத்து என் அண்ணன் பெயரில் இருந்தது. பட்டாவை வாதி அவர் பெயருக்கு மாற்றிக்கொண்டுள்ளார். ருத்திரமூர்த்தி கிரயம் வாங்கிய சொத்தில் தான் நான் வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்டுவதற்கு வாதியிடம் அனுமதி கேட்டேனா என்றால் வாதி ஊரில் வந்து பஞ்சாயத்து பேசி ஆளுக்கு 65 சென்ட் நிலம், வீட்டுமனை விட்டார்கள். ஊரில் பேசியதற்கு ஆவணம் இல்லை. வாதி 60 சென்ட் எழுதிக்கொடுப்பதாக சொன்னதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் வாதி அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் இடத்தில் வீடு கட்டுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அதையும் மீறி நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் வீடு கட்டியுள்ளேன். ருத்திரமூர்த்தி 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன், 2ம் பிரதிவாதி 10ம் வகுப்பு வரை

படித்துள்ளார். என் தகப்பனார் ருத்திரமூர்த்தியை நன்கு படிக்கவைத்து எல்லோரையும் காப்பாற்றுவார் என நம்பிக்கை வைத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.